செ.வெ.எண்: 49 நாள்: 17.02.2017

# பத்திரிகைசெய்தி

2017 ஜனவரி 1-ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு மேற்க்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு, நீக்கம், திருத்தம், இடமாற்றம் செய்ய விண்ணப்பங்கள் கடந்த ஆண்டு செப்டம்பர் 1-ம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை பெறப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் கடந்த ஜனவரி 5-ஆம் தேதி வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

புதிய வாக்காளர்களுக்கு தமிழகத்தில் உள்ள இ-சேவை மையங்கள் மூலம் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.விண்ணப்பத்தில் தங்களது கைப்பேசி எண்ணை அளித்துள்ள புதிய வாக்காளர்களுக்கு ஒரு தனிப்பட்ட அடையாள எண், குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்படும். இந்த அடையாள எண்ணை தங்கள் பகுதிக்கு அருகில் உள்ள இ-சேவை மையங்களில் காண்பித்து வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். தங்களுடைய கைப்பேசி எண்ணை அளிக்காத புதிய வாக்காளர்கள் தேர்தல் துறையின் கட்டணமில்லா உதவி எண் 1950-ஐ தொடர்பு கொண்டு கைப்பேசி எண்ணை பதிவு செய்ய வேண்டும் . அவர்களுக்கும் அடையாள எண் வழங்கப்படும். அவர்களும் தங்களது ஏதாவது ஒரு புகைப்படங்களை காண்பித்து வாக்காளர் அடையாள அட்டையை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**